பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 09 2026 TUESDAY 7.15 AM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. Bishkek-ல் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றுகிறார்.
2. உலக அளவில் பல்வேறு துறைகளில் நமது நாடு முன் எப்போதும் இல்லாத வகையில், பங்களிப்பை விரிவுப்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி.திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
3. உத்தரப்பிரதேசத்தில் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.
4. நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்க 939 ஆக அதிகரித்துள்ளது.
5. அர்ஜன்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கிர்கஸ்தான் தலைநகர் Bishkek-ல் இன்று நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றுகிறார்.

இதில் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் இந்தியாவில் உள்ள வாய்ப்புகள் குறித்து அவர் எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக நேற்று நடைபெற்ற உலக நாடோடிகள் விளையாட்டு போட்டி தொடக்க விழாவில் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டார்.

இதில், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், ஈரான் அதிபர் திரு.Masoud Pezeshkian உள்ளிட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியில் பங்கேற்றுள்ள இந்திய குழுவினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் மோடி சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

வரும் 6 ஆம் தேதி முதல் நடைபெறும் இப்போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

உலக அளவில் பல்வேறு துறைகளில் நமது நாடு முன் எப்போதும் இல்லாத வகையில், பங்களிப்பை விரிவுப்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி.திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற 18 தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்லூரிகளின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

உலக அளவில் இந்தியாவின் நிலையை மேம்படுத்துவதில் ஆடை வடிவமைப்பு தொழில்துறைக்கு பெறும் வாய்ப்புகள் உள்ளதாக கூறினார்.

பாரம்பரிய கைவினைஞர்களுக்கு ஆதரவும், வழிகாட்டுதலும் அளிக்கப்படும்போது, அவர்களது அடுத்த தலைமுறையினரை இத்தொழில்களில் நம்பிக்கையுடன் ஈடுபட ஊக்குவிக்கும் என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் கவுசாம்பியில் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

வேளாண் நிலத்தில் இந்த பட்டாசு ஆலை இயங்கி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த வெடிவிபத்து காரணமாக அருகே உள்ள 5 வீடுகள் சேதமடைந்தன.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் காவல் துறையினர் தீயணைப்பு படைவீரர்கள், விமானப்படை வீரர்கள் இணைந்து தீயை அணைக்கு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண நிதி வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் திருப்பூரில் உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவன கல்லூரியில் செயல்பட்டு வரும் அடல் தொழில் காப்பக மையம் ஜவுளித்துறையில் புதிய தொழில்முனைவோரை உருவாக்கி வருகிறது.

இந்நிறுவனம் ஜவுளி தொழிற்சாலைகளின் கழவுநீர் சுத்திகரிப்பின்போது உருவாகும் உப்பு கழிவை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றும் முயற்சிக்கு ஆதரவளித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இரண்டாம் கட்ட செமிகண்டெக்டர் திட்டத்திற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 1 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

சிப் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்கு இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

செமிகண்டெக்டர் துறையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த நான்காண்டுகளுக்குள் 85 ஆயிரம் செமிகண்டெக்டர் பொறியாளர்கள் உருவாக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

எரிசக்தித்துறையில் கத்தார் உடனான ஒத்துழைப்பு வலுவாக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

கத்தாருக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தூதர் டாக்டர் K. Srikar Reddy-யுடன் பேச்சு நடத்திய பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே திரவ எரிவாயுக்கான ஒப்பந்தம் 20 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<>>>>

நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்க 939 ஆக அதிகரித்துள்ளது.

4 ஆயிரத்து 247 பேரை கண்டறிய முடியவில்லை என்று கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேபாள ராணுவத்தினர், காவல்துறையினர், ஆயுதப்படையினர் ஆகியோர் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், நவீன மீட்பு உபகரணம் பற்றாக்குறையால், மீட்பு பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மீட்பு பணியில் 21 ஆயிரம் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளதாக நேபாள பிரதமர் திரு. பாலேந்திர ஷா தெரிவித்துள்ளார்.

இந்தப் பெருவெள்ளத்தால் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவை சங்கம் கணித்துள்ளது.

மீட்பு பணியில் உதவுவதற்காக இந்தியாவின் சார்பில் சிறப்பு குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

டிஎன்ஏ பரிசோதனையில் உதவுவதற்காக 19 பேர் கொண்ட இந்திய தடய அறிவியல் குழுவினர் காத்மாண்டுவில் உள்ளனர்.

<<<<>>>>

சத்திஷ்கரில் இன்று மிக கனமழை முதல் அதி கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சல பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசத்தின் கிழக்கு பகுதி, உத்தரப்பிரதேசம், ஜார்க்கண்ட், ஒடிசா, உத்தராகண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அர்ஜன்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸி சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

39 வயதான அவர், 20 ஆண்டுகளாக அர்ஜன்டினா அணியில் இடம் பெற்று தமது நாட்டிற்காக 207 போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

ஒரு உலகக்கோப்பை வெற்றியும், 2 கோபா அமெரிக்கா வெற்றியும் இதில் அடங்கும்.

-----------

செக் குடியரசில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 9-11, 11-4, 11-5, 11-6 என்ற செட் கணக்கில் ஸ்லோவேனியாவின் Deni Kozul-ஐ வென்றார்.

-------

யுனிவெர்சல் ஜம்ப் ரோப் சாம்பியன் போட்டியின் கலப்பு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்ற போட்டியில் ஜொராவர் சிங், பூஜா ஆர்யா, யாஷ், மோகித் ஆகியோரை கொண்ட குழு இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இந்தியா இப்போட்டியில் 25 தங்கம், 12 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--------

Pontianak Indonesia மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் தருண் மன்னேபல்லி, மிதுன் மஞ்சுநாத், அஸ்வினி பொன்னப்பா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.